தமிழ்நாடு பதிவுத்துறைத் தலைவர் மற்றும் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்,சென்னை-28

முன்னிலை : டாக்டர்.இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,

ப.மு.எண்: 18115/P1/2016 நாள்: 09.02.2017

பொருள்: மேல்முறையீடு - சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம், கரூர் ஆவண எண்.P22/2015 முத்திரைச் சட்டப் பிரிவு 56(1)ன் கீழ் மேல்முறையீடு - இறுதியாணை வழங்கல்.

பார்வை:
1) கரூர் மாவட்டப்பதிவாளர் ஆணை எண்.ஐ எண்.2/ஆ1/2016 நாள்.22.02.2016
2) திரு. கார்த்திகேயன் மற்றும் திருமதி. எம். பூங்கொடி, அரவக்குறிச்சி, சீராய்வு மனு நாள் இல்லை.

---------

ஆணை :

கரூர் பதிவு மாவட்டம், சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலக நிலுவை ஆவணம் P22/2015 தொடர்பாக கரூர் மாவட்டப்பதிவாளர் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 40(1)(பி)-ன்கீழ் பார்வை 1ல் கண்ட ஆணை வாயிலாக செலுத்தக்கோரிய குறைவு முத்திரைத் தீர்வை ரூ.87,490/- மற்றும் அபராதம் ரூ.510/- ஆக கூடுதல் ரூ.88,000/-செலுத்தக்கோரியதை எதிர்த்து இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 56(1)-ன் கீழ் பார்வை 2ல் கண்ட சீராய்வு மனு பெறப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கிலான ஆவணத்தின் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| ஆவண எண். | P 22/2015 |
| அலுவலகம் | சின்னதாராபுரம் சார்பதிவகம், கரூர் |
| பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்ட | 15.06.2015 |
| ஆவணத் தலைப்பு | பாகப்பிரிவினை பத்திரம் |

Verified RealEstate ™

| | |
|---|---|
| ஆவணதாரர்கள் | 1. திருமதி.வள்ளியம்மாள் க/பெ.(லேட்) கருப்பண்ண கவுண்டர். (லேட் முத்துசாமி கவுண்டரின் தாயார்)<br>2. திரு. எம். ஷண்முகம், த/பெ. முத்துசாமி கவுண்டர் (லேட்)<br>3. திருமதி. பூங்கொடி, க/பெ. முத்துசாமி கவுண்டர் (லேட்)<br>4. திரு. எம். கார்த்திகேயன், த/பெ. முத்துசாமி கவுண்டர் (லேட்) (தாயார் திருமதி. பூங்கொடி) |
| ஆவணம் தாங்கிய முத்திரைத் தீர்வை | ரூ.35,000/- |

3) ஆவண வாசகங்களின்படி வழக்கிலான ஆவணம் லேட் திரு. முத்துசாமி கவுண்டரின் தாயார், அவருடைய முதல் மனைவி சாமியாத்தாளின் மகன் திரு.எம். ஷண்முகம், இரண்டாவது மனைவி திருமதி. பூங்கொடி, மற்றும் இரண்டாவது மனைவிக்கு பிறந்த அவருடைய மகன் திரு. எம். கார்த்திகேயன் ஆகியோரால் பாகப்பிரிவினை ஆவணமாக சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாப சொத்துக்கள், திரு. கருப்பண்ண கவுண்டருக்கு கிரைய ஆவணம் மூலமும் (ஆவண எண்.1876/1954) ஒரு பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் மூலமும் கிடைக்கப் பெற்றதாகும். கருப்பண்ண கவுண்டர் எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் காலமான பின்னர் பிரஸ்தாப சொத்துக்கள் அவருடைய ஒரே வாரிசான திரு. முத்துசாமி கவுண்டர் என்பருக்கு வாரிசுரிமைப்படி கிடைக்கப் பெற்று அவரது காலத்திற்கு பின்னர் ஆவணதாரர்களால் கூட்டாக அனுபவித்த சொத்தாகும். இந்நிலையில் ஆவணதாரர்களில் 1, 2 மற்றும் 4ம் தரப்பினர்கள் மூன்றாம் தரப்பினரான திருமதி. பூங்கொடியுடன் (முத்துசாமி கவுண்டரின் இரண்டாம் மனைவி) பிரஸ்தாப சொத்து மற்றும் குடும்ப நிதி ரூ.2,00,000/- ஆகியவற்றை தற்போது பாகம் பிரித்து கொள்கின்றனர்.

Verified RealEstate™

மேற்படி ஆவணத்தினை பரிசீலித்த மாவட்டப்பதிவாளர் திருமதி. பூங்கொடி திரு. முத்துசாமி கவுண்டரின் இரண்டாம் மனைவி என்பதால் கீழ்க்கண்டவாறு ஆவணத்தினை மூன்று தன்மை கொண்டதாக பாவித்து குறைவு முத்திரைத் தீர்வை கணக்கிட்டுள்ளார்.

(i) இரண்டாவது மனைவியான திருமதி. பூங்கொடி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் இந்திய முத்திரைச் சட்டக் கூறு 58(a)(ii)ன்படி குடும்ப நபரல்லாதோருக்கான செட்டில்மெண்ட்

(ii) முதல் மற்றும் இரண்டாவது ஆவணதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் இந்திய முத்திரைச் சட்டக் கூறு 45(a)ன்படி குடும்ப நபர்களுக்கிடையே பிரித்துக் கொள்ளும் பாகம்.

(iii) இரண்டாவது மனைவிக்கு பிறந்த திரு. கார்த்திகேயன் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் இந்திய முத்திரைச் சட்டக் கூறு 45(b)ன்படி குடும்ப நபரல்லாதவர்களுக்கிடையே பிரித்துக் கொள்ளும் பாகம்.

மேற்படி மாவட்டப்பதிவாளரின் ஆணையை எதிர்த்து பெறப்பட்ட மேல்முறையீட்டில் முதல் மனைவி திருமதி. சாமியாத்தாள் என்பவர் 25.07.1980ல் இறந்த பின்னரே திரு. முத்துசாமி கவுண்டர் 14.09.1981ல் திருமதி. பூங்கொடி என்பவரை திருமணம் செய்தார் எனவும், திருமதி. பூங்கொடி என்பவரும் அவரது மகனான திரு. கார்த்திகேயன் என்பவரும் திரு. முத்துசாமி கவுண்டரின் Class I வாரிசுகளே என்றும், எனவே இந்த ஆவணம் இந்திய முத்திரைச் சட்டக் கூறு 45(a)ன்படி குடும்ப நபர்களுக்கிடையே வகைப்படுத்தக்கூடிய பாகப்பிரிவினை ஆவணமே என்று தெரிவித்துள்ளனர்.

28.11.2016 அன்று நேரடி விசாரணையின் போது ஆஜரான சீராய்வு மனுதாரர் திரு. கார்த்திகேயன், திருமதி. சாமியாத்தாள் என்பவரின் இறப்புச் சான்று மற்றும் திருமதி. பூங்கொடி என்பவருக்கு நடந்த திருமணச் சான்றினை தாக்கல் செய்ய ஒரு மாதம் கால அவகாசம் கோரினார். அதன்பின்னர் அவருக்கு 05.01.2017 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராக அறிவிப்பு அனுப்பப்பட்டது. நேரடி விசாரணைக்கு

Verified RealEstate

ஆஜராகாத திரு. கார்த்திகேயன் சான்றாவணங்களாக தனது தந்தை மற்றும் சாமியாத்தாள் ஆகியோரது இறப்பு சான்றிதழ்கள், தனது தாயாரின் திருமணத்தை மெய்ப்பிப்பதற்கு அஞ்சூர் கிராம நிர்வாக அலுவலர் 08.04.2016ம் தேதி வழங்கிய சான்றிதழ் ஆகியவற்றை அனுப்பியுள்ளார்.

மனுதாரரின் சீராய்வு மனு மற்றும் மாவட்டப்பதிவாளரிடமிருந்து வரப்பெற்ற கோப்பு ஆகியன என்னால் கவனமுடன் பரிசீலிக்கபபட்டன.

அஞ்சூர் கிராம நிர்வாக அலுவலரால் 08.04.2016ல் வழங்கப்பட்ட சான்றிதழில் கருப்பண்ண கவுண்டர் மகன் திரு.முத்துசாமி கவுண்டர் என்பவர் தன் முதல் மனைவியான சாமியாத்தாள் என்பவர் இறந்ததற்கு பின் இரண்டாம் தாரமாக மங்கலம்பட்டி கிராமம் வாய்க்கால்மேட்டுப்புதூரை சேர்ந்த செல்ல கவுண்டர் மகள் பூங்கொடி என்பவரை மறுமணம் செய்து கொண்டார் என விசாரணையில் தெரியவந்ததாக தெரிவித்துள்ளார்.

வழக்கிலான ஆவணத்தை பரிசீலனை செய்த மாவட்டப்பதிவாளர் இரண்டாம் மனைவியான திருமதி. பூங்கொடி என்பவருக்கு பிறந்த 4ம் தரப்பினருக்கான பாகமானது இந்திய முத்திரைச் சட்டக் கூறு 45(b)ன் படி குடும்ப உறுப்பினர்களுக்கிடையே இல்லாத பாகம் என தன்மை நிர்ணயம் செய்தது சட்டப்படி நிலைக்கத் தக்கதல்ல. இவ்வாவணதரப்பினர்களில் திரு. சண்முகம் மற்றும் திரு. கார்த்திகேயன் ஆகிய இருவரும் திரு. முத்துசாமி என்பவரின் முறைப்படியான வாரிசுகளே ஆவர்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) அமர்வு, W.P.(MD) No.58/2012 நாள்.24.02.2014 என்ற வழக்கின் தீர்ப்புரையில் இந்திய முத்திரைச் சட்டத்தின்படி குடும்ப உறுப்பினர்கள் என்ற பதத்தை பொறுத்த வரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

Verified RealEstate TM

உறுப்பினர்களுக்கிடையே அல்லாத பாகம் எனவும் ஆணையிடப்படுகிறது. இதன் அடிப்படையில் திருந்திய ஆணை பிறப்பித்திட மாவட்டப்பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்xx இரா செல்வராஜ்/09.02.2017
பதிவுத்துறைத்தலைவர் மற்றும் முதன்மை
வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்
/ஆணையின்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக
13/2/17

பெறுநர்

திரு. கார்த்திகேயன்,
த/பெ. லேட் முத்துசாமி கவுண்டர்,
பாண்டிபாளையம்,
அஞ்சூர் கிராமம்,
அரவக்குறிச்சி வட்டம்,
கரூர் மாவட்டம்.
நகல் : மாவட்டப்பதிவாளர்,
கரூர். (அசல் கோப்புடன்)
" : மு.ஆ.கோ. P1
" : கோப்பு நகல்

Verified RealEstate ™